# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2016.11.17

ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 16/2016

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

## பல்கலைக்கழக முறைமையில் விரிவுரையாளர்கள் தவிர ஏனைய பணியாளர்களின் ஓய்வுபெறும் வயது

" 55 வயதின் பின்னர் சேவையை நீடித்தல்" தொடர்பான 2010.12.29 ஆம் திகதிய 940 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது. 2016 நவம்பர் மாதம் 03 ஆம் திகதி நடைபெற்ற 952 ஆவது கூட்டத் தொடரின்போது ஆணைக் குழு, "அரச தொழில் முயற்சிகளில் பணியாளர்கள் ஓய்வு பெறும் வயது" எனும் தலைப்பில் 2013.01.15 ஆம் திகதி வெளியிடப்பட்ட 01/2013 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையை 2016 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகார சட்டத்துடன் (திருத்தப்பட்ட) இணைந்த வகையில் அமுல்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

2009 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க சட்டத்தின் ஊடாக திருத்தியமைக்கப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகார சட்டத்தின் 75 ஆவது உறுப்புரை கீழ் குறிப்பிடப்படும் வகையில் திருத்தியமைக்கப்பட்டு பதிலீடு செய்யப்பட்டுள்ளது.

"75. (1) அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் பிரகாரம் அரச ஊழியர் ஒருவரின் ஓய்வு பெறும் வயது, அரச ஊழியருக்கு ஏற்புடைத்தாகும் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் விரிவுரையாளர் தவிர எந்தவொரு பதவியையும் வகிப்பவரின் ஓய்வு பெறும் வயது தொடர்பாக ஏற்புடையதாக இருக்கும்.

(2) (அ) அந்தப் பதவியை வகிப்பவர் இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் உயர் கல்வி நிறுவகத்தின் நிர்வாக சபை அல்லது ஆணைக் குழு அல்லது அந்த நபர் நிறுவகமொன்றுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் சந்தர்ப்பமொன்றின்போது அந்த நிறுவகம் இணைக்கப்பட்டிருக்கும் உயர் கல்வி நிறுவகத்தின் நிர்வாக சபையினால் அந்த நிறுவகத்தின் பரிந்துரையின் அடிப்படையில் குறிப்பிட்ட நிறுவகத்தின் நிர்வாக சபை அல்லது ஆணைக் குழுவினால் சந்தர்ப்பத்திற்கேற்ப துர் நடத்தை, வினைத்திறனின்மை அல்லது அலுவலைத் தட்டிக்கழித்தல் போன்ற காரணங்களுக்காக நடாத்தப்படும் விசாரணையின் தீர்ப்பு வழங்கப்படும் வரை அந்தப் பதவியை வகிப்பவரின் சேவை தற்காலிகமாக இடை நிறுத்தப்படும்.

(ஆ) அவ்வாறான விசாரணையின் பின்னர் அந்தப் பதவியை வகிப்பவர் குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டால் சந்தர்ப்பத்திற்கேற்ப அவ்வாறான நபரொருவர் இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் உயர் கல்வி நிறுவகத்தின் நிர்வாக சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் அப் பதவியை வகிப்பவரை கட்டாய ஓய்வு பெறச் செய்தல் அல்லது பணி நீக்கம் செய்யும் நடவடிக்கையை ஆணைக் குழு மேற்கொள்ளும்."

அதற்கிணங்க, மேலே குறிப்பிடப்பட்டுள்ள உரைகளுடன் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளைப் பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சகல உயர் கல்வி நிறுவகங்கள் / நிறுவகங்களிடம் வேண்டிக்கொள்ளப்படுகின்றது.

I. விரிவுரையாளர்கள் தவிர பல்கலைக்கழக முறைமையில் பணியாற்றும் ஊழியர் ஒருவரின் ஒய்வு பெறும் வயது 55 ஆக இருப்பதுடன், எவராவது ஒரு ஊழியர் இந்த வயதெல்லையைத் தாண்டி சேவையில் ஈடுபடுவதற்கு கருதினால் சேவை நீடிப்புக் கோரிக்கை இன்றி கட்டாய ஓய்வு பெறும் வயது அதாவது 60 வயது வரை அவரால் சேவையாற்ற முடியும்.

II. 55 - 60 வயது வரைக்குட்பட்ட காலத்தினுள் ஊழியருக்கு அவரது விருப்பத்தின்பேரில் ஆணைக்குழுவிடம் / நிர்வாக சபையிடம் 03 மாதத்திற்கு முன்னர் அறிவித்தல் விடுப்பதன் மூலம் சேவையிலிருந்து ஓய்வு பெற முடியும்.

III. வினைத்திறன் மற்றும் செயலாற்றுகை திருப்திகரமற்ற எந்தவொரு ஊழியருக்கும் 55 வயதுக்குப் பின்னர் சேவை நீடிப்பை பெற்றுக்கொடுக்கக் கூடாதென ஆணைக்குழு / நிர்வாக சபை தீர்மானித்தால் ஊழியருக்கு மேன்முறையீட்டை முன்வைப்பதற்கு முடியுமான வகையில் 06 மாதத்திற்கு முன்னர் அறிவித்தலொன்றை விடுத்ததன் பின்னர் சேவையிலிருந்து ஓய்வு பெறச் செய்யும் அதிகாரம் ஆணைக்குழு / நிர்வாக சபைக்கு உண்டு.

இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் உடனடியாக அமுலுக்கு வருவதுடன், இந்தச் சுற்றறிக்கை அமுல்படுத்தப்பட ஆரம்பித்ததுடன் 2010.12.29 ஆம் திகதிய 940 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை இரத்துச் செய்யப்படும்.

தயவு செய்து இதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை குறிப்பிட்ட சம்பந்தப்பட்ட ஊழியர்களின் கவனத்திற்கு உட்படுத்தி இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா

தலைவர்

பிரதிகள்:-

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்,
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் /சிரேஷ்ட உதவிநிதிப் பொறுப்பாளர்கள்/ உதவிநிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/6/3/13